Vol. 4 No. 3 April 2020 E-ISSN: 2456-5571

# நற்றிணையில் பழந்தமிழரின் உணவுகள்

**ஷா. முஹம்மது அஸ்ரின்**
*முதுகலைத் தமிழ் இரண்டாம் ஆண்டு (UGC-JRF)*
*முதுகலைத் தமிழாய்வுத் துறை*
*ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சி*

**முனைவர் த. செல்வராசு**
*இணைப்பேராசிரியர்*
*முதுகலைத் தமிழாய்வுத் துறை*
*ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சி*

## முன்னுரை

இலக்கியம் என்பது மக்களின் வாழ்க்கை முறையை எழுத்து வழியாகப் படம்பிடித்துக்காட்டும் கருவியாகும். இலக்கியத்தின் வடிவங்கள் காலத்திற்கேற்ப மாற்றம் அடைந்து வந்தாலும், மக்களின் வாழ்க்கையை மையமாகக் கொண்டே திகழ்கின்றன. மேலும், உணவு, உடை, காதல், நட்பு, பகை, வீரம், வழிபாடு, தொழில், பண்பாடு போன்றவற்றை கண்ணாடியாகக் காட்டுகின்றன. அவ்வகையில் சங்க கால மக்களின் உணவுப் பொருட்களையும் உணவு முறைகளையும் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாக விளங்கும் நானூறு அகப்பாடல்களைக் கொண்டுள்ள நற்றிணையின்வழி இக்கட்டுரை எடுத்தியம்ப முனைகிறது.

## திணைகளும் உணவுகளும்:

உணவு என்றால் உண்ணப்படுவது என்பது பொருள். சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள், வியர்வை சிந்தி உழைத்தே உணவுகளைப் பெற்றனர். ஐந்திணை மக்களின் உழைப்பே, தொழிலாக மாறுபட்டு, அவர்களின் தொழிலுக்கேற்பப் பெயர்களும் வழங்கப்பட்டன. மேற்கணக்கு நூல்களுக்கு (எட்டுத்தொகை, பத்துப்பாட்டு) இலக்கணம் கூறும் முழுமையாகக் கிடைக்கப்பெற்ற முதல் இலக்கண நூலில்,

> **"தெய்வம் உணாவே மாமரம் புள்பறை**
> **செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**
> **அவ்வகை பிறவும் கருஎன மொழிப."**
> **(தொல்.பொருள்.20)**

என முறைசிறந்த மூன்றனுள் ஒன்றான கருப் பொருளுக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியர், தெய்வத்திற்கு அடுத்து உணவையேகுறிப்பிட்டுள்ளார். இதன் வாயிலாகப் பழந்தமிழக மக்கள் உண்ணும் உணவை தெய்வத்திற்கு அடுத்த நிலையில் வைத்து சிறப்பித்துள்ளனர் என்பது தெளிவாகிறது.

மேலும், தமிழர்கள் உணவையே பெருஞ் செல்வமாகக் கருதிப் பாதுகாத்ததாகக் குறிப்பொன்றும் காணப்படுகிறது. அதில், "தங்குவதற்கான இடத்திற்காக அல்லாமல் உணவுப்பொருட்கள் வடிவிலான பழங்காலச் செல்வத்தை ஈட்டி வைப்பதற்காகவே வீடுகள் முதன்முதலாகக் கட்டப்பட்டன" என கா.கோவிந்தன் குறிப்பிட்டுள்ளார். **(கோவிந்தன்.கா, தமிழர் பண்பாடு, 1999, ப. 19)**

## உணவுப் பொருட்கள்

காடு, மலை, வயல், கடல் ஆகிய இயற்கை வளங்கள் சூழப்பட்ட பழந்தமிழகத்தில் வாழ்ந்த மக்கள், அவ்வியற்கை தருகின்ற காய்கனிகளையும், அங்கு வாழுகின்ற செடிகொடிகள், பறவைகள், விலங்குகள் ஆகியவற்றையும் உண்டு வாழந்தனர். தங்களுக்கு கிடைத்த பறவைகளையும் விலங்குகளையும் பக்குவமான முறையில் சமைத்து உண்டனர்.

## கள்

அரியல், பாடலி, தேன், மட்டு, அரிட்டம், சுண்டை, தொண்டி, முருகு, சாயனம், கௌவை, முண்டகம், சாதி, சாலி, பிரசம், மாதவம், மேதை, பிழி, சேறு, தணியல், மாரி, சுரை, மது, சுமாலி, மாலி, சுலோகி, சொல்விளம்பி, நறவு, ஆசவம், தொப்பி, நனை, இக்கு, ஞாளி, குந்தி, வெறி, வெடி, சாறு, பானம், விகுணி, சோபம், வேரி, மறவி, தேம், சிவிகை, தேறல், மகரந்தம், மதிரை, ஆம்பல், படு ஆகிய 48 சொற்களும் கள்ளைக் குறிக்கின்றன. **(கதிரைவேற்பிள்ளை. நா, 1938, ப. 123)**

இயற்கையில் இருந்து கிடைக்கப்பட்ட உணவுப் பொருட்களைக் கொண்டு தங்களது இல்லங்களிலேயே கள்ளைச் சமைத்தனர். மீன்களை வேட்டையாடும் நெய்தல் நிலப் பரதவ மக்கள் பனை மரங்களில் இருந்து எடுக்கப்பட்ட கள்ளை குடித்து

மகிழ்ந்துள்ளனர். அதற்குப் **"பிழி"** எனப் பெயரிட்டு வழங்கியுள்ளதை,

**"இரும்பனந் தீம்பிழி உண்போர் ……"**

**(நற்றிணை.38: 3)**

என்ற உலோச்சனாரின் தலைவி கூற்றாக அமைந்த பாடலால் அறியமுடிகிறது.

மேலும், மீன்களை கரையில் குவித்த நெய்தல் நிலத் தலைவன் புன்னை மர நிழலில் தனது சுற்றத்தாருடன் கள்ளை உண்டு மகிழ்ந்த செய்தியை,

**"தேம்கமழும் தேறல் கிளையோடு மாந்திப்**
**பெரிய மகிழும் துறைவன் ……………"**

**(நற்றிணை.388: 8-9)**

என்ற பெருங்கண்ணனாரின் தலைவி கூற்றாக அமைந்த பாடலால் அறியமுடிகிறது. முல்லை நிலத்தில் வாழ்ந்த மக்கள் 'கள்'ளையும், குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த மக்கள் 'அரியல்' என்ற கள் வகையையும் உண்டு மகிழ்ந்துள்ளனர்.

**"இருமடைக் கள்ளின் இன்களி செருக்கும்"**

**(நற்றிணை.59: 5)**

**"அரியல் ஆர்ந்தவர் ஆயினும் பெரியர்"**

**(நற்றிணை.156: 8)**

### தேனும் பாலும்

தேன் கூடுகளில் இருந்து தேன் எடுப்பதைத் தொழிலாகக் கொண்ட குறிஞ்சி நில மக்களான குறவர்கள், தேன் கூடுகளில் இருந்து கற்குழியில் கசிந்த தேனை உண்ட செய்தியை,

**"புள்ளுற்றுக் கசிந்த தீம்தேன் கலளைக்**
**குறக் குறுமாக்கள் உண்ட மிச்சிலை"**

**(நற்றிணை.168: 3-4)**

என்ற பாடலில் குறவர்கள் தேனை சேகரிக்க தேன் கூடுகளுக்குக் கீழே குழிகளை அமைத்தள்ளனர் என்பதும் புலப்படுகிறது.

பிரிதலை உரிப்பொருளாக்க் கொண்டமைந்த பாலைத் திணைப் பாடல்களில், பாலையும் தேனையும் கலந்து உணவாக உட்கொண்ட செய்தி இடம்பெற்றுள்ளது. எனவே, சங்க கால தமிழ் மக்கள் உடலுக்கு ஊட்டச்சத்தை மிகுதியாகத் தரக்குடிய ஆவின் பாலையும், தேனீக்களின் தேன்களையும் உணவாகக் கொண்டுள்ளனர். இதனை,

**"பிரசம் கலந்த வெண்சுவைத் தீம்பால்"**

**(நற்றிணை.110: 1)**

**"யானும் தாயும் மடுப்ப, தேனொடு**
**தீம்பால் உண்ணாள் வீங்குவனள் விம்மி"**

**(நற்றிணை.179: 5-6)**

ஆகிய செவிலி கூற்றாக அமைந்த இருபாடல்கள் வாயிலாக அறிய முடிகிறது.

### காய்கனிகள்

நெல்லிக்காயை **'ஆமலகம்'** என்றும் வழங்குவர் **(ஆறுமுகஞ்சேர்வை.வீ, 1914, ப. 32).** தலைவனோடு உடன்போக்கு செல்லும் தலைவி, வழியில் வீழ்ந்து கிடக்கும் நெல்லிக்கனியை உண்டதாக அமைந்த தாய் கூற்றுப்பாடலும்,

**"சுவைக்காய் நெல்லிப் போக்கு அரும்பொங்கர்**
**வீழ்கடைத் திரள்காய் ஒருங்குடன் தின்று"**

**(நற்றிணை.271: 5-6)**

நெய்தல் நில மக்கள் பனை மரங்களில் இருந்து கிடைக்கும் நுங்குகளை (பனம்பழங்களை) உண்டதாக மருதன் இளநாகனாரின் தோழி கூற்றாக அமைந்த பாடலும்,

**"மனை அழுதொழிந்த புன்தலைச் சிறாஅர்**
**துணையதின் முயன்ற தீம்கண் நுங்கின்"**

**(நற்றிணை.392: 3-4)**

சங்க காலத்தில் மரங்களில் இருந்து கிடைக்கும் பழங்களையும் காய்களையும் உண்டுள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

### மாமிச உணவுகள்

தமிழர்கள் வீட்டிற்கு வரும் விருந்தினர்களை வரவேற்று விருந்தளிக்கும் பண்புடையவர்கள். இரவில் வந்த விருந்தினர்களுக்கு நெய்தல் நிலத் தலைவி அன்புடன் கொழுப்புடைய புலால் (ஊன்) உணவில் நெய்யை கலந்து சமைத்துக் கொடுப்பதாக அமைந்த,

**"……… ………. நெய்துளந்து அட்ட**
**விளர் ஊன் அம்புகை எறிந்த நெற்றி"**

**(நற்றிணை.41: 7-8)**

என்ற பாடல் நெய்தல் நில மக்களின் விருப்பமான உணவாகவும் விருந்தினர்களுக்குக் கொடுக்கப்படும் சிறப்பான உணவாகவும் புலால் உணவு விளங்கியது தெளிவாகிறது.

மேலும், காடுகளில் வாழ்ந்த முல்லை நில் மக்களுள் ஒருவரான வேட்டுவர் வரிகளைக் கொண்ட உடும்பையும், புற்றுகளில் வாழும் ஈயல் (கரையான்)களையும், துள்ளியோடும் முயலையும் சுமந்து வந்து தன் இல்லத்தில் கள்ளைக் குடித்து மகிழ்ந்தான். இதனை,

**"உடும்பு கொலீஇ வரிநுணல் அகழ்ந்து**
**நெடுங்கோட்டுப் புற்றத்து ஈயல் கெண்டி**
**எல்லுமுயல் எறிந்த வேட்டுவன் சுவல**
**பல்வேறு பண்டத் தொடை மறந்து ……"**

**(நற்றிணை. 59: 1-4)**

என்ற தலைவன் கூற்றாக அமைந்த கபிலரின் முல்லைத் திணைப் பாடல் எடுத்தியம்புகிறது. உடும்பை **'கோதா', 'தடி', 'முசலி'** போன்ற பெயர்களாலும், **(கதிரைவேற்பிள்ளை. நா, 1938, ப. 65).** முயலை **'வயம்', 'சசம்'** என்ற வேறு

பெயர்களைக் கொண்டும் வழங்குவர். **(ஆறுமுகஞ் சேர்வை.வீ, 1914, ப. 22)**

**பன்றிக் கறி**

பன்றிக்கு கேழல், அரி, குரோடம், கிரி, கீடி, கிருட்டி, ஏனம், மோழல், இருளி, வல்லுளி, களிறு, மைம்மா, கோட்டுமா, போத்திரி, வராகம், கோலம், சூகரம், ஏறுழி எனப் பல பெயர்கள் உண்டு. **(கதிரைவேற்பிள்ளை. நா, 1938, ப. 63)**. மலையில் வாழும் மக்களான குறவர்கள் பன்றியை வேட்டையாடிக் கொன்று மிகுதியான தசைகளை வீட்டுக்கு எடுத்துச் சென்றதாக,

**"கொடுவிற் கானவன் கோட்டுமா தொலைச்சிப்**
**பச்சூன் பெய்த பகழி போல"**

**(நற்றிணை.75: 6-7)**

**"சிறுகட் பன்றிப் பெருஞ்சின ஒருத்தல்**
**சேறுஆடு இரும்புறம் நீறொடு சிவண"**

**(நற்றிணை.82: 7-8)**

என்ற தலைவன் கூற்றாக அமைந்த பாடல்கள் சங்க கால மக்கள் பன்றியை உணவாக உட்கொண்டதற்குச் சான்றாக அமைகின்றன.

மற்றொரு பாடலில், வெண்மையான கொம்புகளைக் கொண்ட ஆண்பன்றியை வேட்டையாடிக் கொன்று தனது வீட்டிற்குக் கானவன் கொண்டு வருகிறான். அதனை, பக்குவமான முறையில் அறுத்துச் சமைத்துத் தனது விருந்தினர்களுக்குக் கானவனின் மனைவி பங்கிட்டுக் கொடுக்கிறாள். இதனை,

**"வில்லின் தந்த வெண்கோட்டு ஏற்றை**
**புனை இருங் கதுப்பின் மனையோள் கெண்டி**
**குடிமுறை பகுக்கும் நெடுமலை நாட!"**

**(நற்றிணை.336: 4-6)**

என்ற கபிலரின் தோழி கூற்றாக அமைந்த பாடலால் புலப்புடுகிறது. ஆண்பன்றி மட்டுமே அறுத்துப் பொரிக்கப்பட்டு உணவாக உட்கொள்ளப்பட்டது. அதனைப் பொதுவாக **'ஏறு'** என்ற பெயரால் வழங்கினர்.

**முள்ளம்பன்றிக் கறி**

குறிஞ்சி நிலத்தில் வாழும் மக்கள் மலைகளில் வாழும் பன்றிகளையும் முள்ளம்பன்றிகளையும் வேட்டையாடிக் கொன்று உணவாக உட்கொண்டுள்ளனர். ஆண் முள்ளம் பன்றிகளை மட்டுமே வேட்டையாடி உணவாக உட்கொண்டதை,

**"வன்கைக் கானவன் வெஞ்சிலை வணக்கி**
**உளமிசைத் தவிர்த்த முளவுமான்**
**ஏற்றையொடு"**

**(நற்றிணை.285: 3-4)**

என்ற பாடலில் இடம்பெற்றுள்ள **'ஏற்றை'** என்ற சொல்லால் அறிய முடிகிறது. தொல்காப்பியர் குறிப்பிடும் பதினைந்து ஆண்பாற் பெயர்களுள் **(தொல்.பொருள்.546)** ஏற்றையும் ஒன்றாகும்.

**"கானவன் எய்த முளவுமான் கொழுங் குறை**
**தேம்கமழ் கதுப்பின் கொடிச்சி கிழங்கொடு**
**காந்தள் அம் சிறுகுடிப் பகுக்கும்"**

**(நற்றிணை.85: 8-10)**

என்ற பாடலில் வேட்டையாடிய முள்ளம் பன்றியை கிழங்கோடு விருந்தினர்களுக்குச் சமைத்துக் கொடுத்துள்ளதைக் காட்டுகிறது. சங்க இலக்கியங்களில் **'முண்மா'**, **'எய்'**, **'சல்லியம்'** ஆகிய சொற்கள் முள்ளம்பன்றியைக் குறிக்குவும். **(ஆறுமுகஞ்சேர்வை.வீ, 1914, ப. 22)**. **'கந்தம்'**, **'மூலம்'**, **'சகுனம்'**, **'மூலகம்'** ஆகியன கிழங்கைக் குறிக்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. **(கதிரைவேற்பிள்ளை. நா, 1938, ப. 91)**.

**நத்தை**

ஈரறிவு உயிரான நத்தைக்கு **'நந்து'** என்ற பெயரும் உண்டு. இதனை தொல்காப்பிய மரபியலில் காணமுடியும். வயல்களைக் காவல் செய்யும் மருத நில மக்கள் ஆமையின் முதுகில் நத்தையை சுட்டு உடைத்து உண்டுள்ளனர். இதனை, பரணரின் தலவி கூற்றாக அமைந்த பாடல் வழியாக அறிய முடிகிறது.

**"பழன யாமைப் பாசடைப் புறத்து**
**கழனி காவலர் சுரிநந்தும் உடைக்கும்"**

**(நற்றிணை.280: 6-7)**

**மீன்**

கடற்கரையில் வாழும் மக்களான பரதவர்களின் உணவாக மீன் விளங்கியுள்ளது. மீன் பிடித்தலைத் தொழிலாகக் கொண்டவர்களே பிற்காலத்தில் மீனவர்கள் எனப் பெயர் பெற்றனர். கடலில் பிடித்த கூர்மையான வாயையுடைய சுறா மீன்களைப் பிடித்துச் சிறிய துண்டுகளாக வெட்டி சமைத்து உணவாக உட்கொண்டுள்ளனர்.

**"நிணச்சுறா அறுத்த உணக்கல் வேண்டி"**

**(நற்றிணை.45: 6)**

**"வாள்வாய்ச் சுறவொடு வயமீன் கெண்டி**
**நிணம்பெய் தோணியர் ……… ……….."**

**(நற்றிணை.111: 7-8)**

மீனுக்கு **'மச்சம்'**, **'சகுலி'**, **'வகுலி'**, **'சலசரம்'** எனப் பல பெயர்கள் உண்டு. **(ஆறுமுகஞ்சேர்வை.வீ, 1914, ப. 26)**. கொழுத்த மீன்களை உண்டு வாழ்க்கை நடத்தும் மக்கள் வாழும் நிலமான நெய்தல் நிலத்தைக் **"கொழுமீன் ஆர்கைச் செழுநகர்" (நற்றிணை.127: 5) "கொழுமீன் ஆர்கைச்**

**செழுநகர் செலீஇய" (நற்றிணை.159: 7)** எனச் சங்க காலத்தில் வழங்கியுள்ளனர்.

**"கருங்கண் வராஅல் பெருந்தடி மிளிர்வையோடு**
**புகர்வை அரிசிப் பொம்மற் பெருஞ்சோறு"**
**(நற்றிணை.60: 4-5)**

என்ற தோழி கூற்றாக அமைந்த மருதத் திணைப் பாடல் வழியாக இரால் மீனை சமைத்து சோற்றோடு உண்டதையும் அறிய முடிகிறது.

**மான்**

மானுக்கு **'அரிணம்', 'சாரங்கம்', 'ஏணம்', 'குரங்கம்', 'நவ்வி', 'உழை', 'பிணை', 'சூணம்'** எனப் பல பெயர்கள் உண்டு. **(கதிரைவேற்பிள்ளை. நா, 1938, ப. 63).** வெப்பமான நிலத்தில் வாழும் பாலை நில மக்களுக்கு உணவு எளிதில் கிடைப்பதிலை. தண்ணீர் இல்லாத நிலமாகக் காட்சியளிப்பதால் விலங்குகளைக் காண்பதும் அரிதாகும். செந்நாய் வேட்டையாடிய மானின் மாமிசங்களை பாலை நிலத்தில் வாழ்ந்தவர்கள் உண்டுள்ளனர்.

**"ஓய்பசிச் செந்நாய் உயங்குமரை தொலைச்சி**
**ஆர்ந்தன ஒழிந்த மிச்சில் சேய்நாட்டு**
**அருஞ் சுரம் செல்வோர்ர்கு வல்சி ஆகும்"**
**(நற்றிணை.43: 3-5)**

என்ற அடிகளால் உணவு கிடைக்காத சூழல்களில் பிற விலங்குகள் சாப்பிடாது விட்டுச் செல்லும் மாமிசங்களையும் தமிழர்கள் உண்டுள்ளனர் என்பது தெளிவாகிறது.

**தொகுப்புரை**

- குறிஞ்சி, முல்லை, நெய்தல் ஆகிய மூன்று திணைப் பாடல்களில் மட்டுமே கள்ளுண்ட செய்தி பதிவாகியுள்ளது. எனவே, அந்நிலங்களில் வாழ்ந்த மக்கள் மட்டுமே கள்ளுண்டு மகிழ்ந்திருக்க வேண்டும்.
- குறிஞ்சி நில மக்கள் மட்டுமே பன்றியை உணவாகக் உட்கொண்டுள்ளனர். மேலும், குறிஞ்சி நில மக்கள் பன்றியையும், நெய்தல் நில மக்கள் கள்ளையும் விருந்தினர்களோடு பகிர்ந்து உண்டுள்ளனர். ஆண் பன்றியை மட்டுமே உணவாகக் கொண்டுள்ளனர்.
- மீன்களை உணவாகக் கொண்டு வாழ்க்கை நடத்தும் மக்கள் வாழும் நெய்தல் நிலத்தை **"கொழுமீன் ஆர்கைச் செழுநகர்"** என வழங்கியதை அறிய முடிகிறது.

**துணைநூற்பட்டியல்**


1. வெள்ளைவாரணன். க (நூ.ஆ), 1950, சங்ககாலத் தமிழ் மக்கள், நே'னல் பப்ளீங் கம்பெனி, சென்னை - 600 001.
2. பவானந்தம்பிள்ளை. ச (தொ.ஆ), 1925, தற்கால தமிழ்ச்சொல்லகராதி, மாக்மில்லன் ரூ கம்பெனி லிமிடெட், சென்னை.
3. கதிரைவேற்பிள்ளை. நா (தொ.ஆ), 1938, சூடாமணி நிகண்டு மூலமும் உரையும், திருமகள்விலாச அச்சுக்கூடம், சென்னை.
4. ஆறுமுகஞ்சேர்வை. வீ (தொ.ஆ), 1914, உரிச்சொல் நிகண்டு, மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை.
5. இராமையா பிள்ளை. நா (உ.ஆ), 1999, நற்றிணை மூலமும் உரையும், வர்த்தமான் பதிப்பகம், சென்னை.
6. புலியூர்க் கேசிகன் (உ.ஆ), 2001, நற்றிணைத் தெளிவுரை பகுதி 1 ரூ 2, பாரி நிலையம், சென்னை.
7. திருஞானசம்பந்தம். ச (உ.ஆ), 2018, தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும், கதிர் பதிப்பகம், திருவையாறு.